**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# தமிழகத்தில் 6.11 கோடி வாக்காளர்கள்

## வரைவுப் பட்டியல் வெளியீடு; பெண்களே அதிகம்

**சென்னை, அக். 27:** தமிழகத்தின் வரைவு வாக்காளர் பட்டியல் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட நிலையில், மாநிலத்தின் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 6 கோடியே 11 லட்சத்து 31 ஆயிரத்து 197-ஆக உள்ளது. ஆண்களைவிட 9 லட்சத்து 85 ஆயிரத்து 961 பெண் வாக்காளர்கள் கூடுதலாக உள்ளனர்.

வரைவு வாக்காளர் பட்டியலில் உள்ள அம்சங்கள் குறித்து தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:



வரைவு வாக்காளர் பட்டியலில் உள்ள அம்சங்கள் குறித்து விளக்கிய தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு.

தமிழகத்தில் ஆண் வாக்காளர்கள் 3 கோடியே 68 ஆயிரத்து 610 பேரும், பெண் வாக்காளர்கள் 3 கோடியே 10 லட்சத்து 54 ஆயிரத்து 571 பேரும், மூன்றாம் பாலினத்தவர் 8,016 பேரும் உள்ளனர்.

**அதிகம் - குறைவு:** மாநிலத்திலேயே அதிக வாக்காளர்களைக் கொண்ட சட்டப் பேரவைத் தொகுதியாக சோழிங்கநல்லூர் உள்ளது. இந்தத் தொகுதியில் 6 லட்சத்து 52 ஆயிரத்து 65 வாக்காளர்கள் உள்ளனர்.

குறைந்த வாக்காளர்களைக் கொண்ட தொகுதியாக நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் உள்ளது. இந்தத் தொகுதியில் ஒரு லட்சத்து 69 ஆயிரத்து 30 வாக்காளர்கள் உள்ளனர்.

வாக்காளர் பட்டியலில் பெயர்களைச் சேர்க்கவும், நீக்கவும், திருத்தங்களை மேற்கொள்ளவும் வெள்ளிக்கிழமை (அக். 27) தொடங்கி டிச. 9 வரை விண்ணப்பப் படிவங்களை அளிக்கலாம். அலுவலக வேலை நாள்களில் வாக்குச்சாவடி நிலை அலுவலர், வாக்காளர் பதிவு அதிகாரி, உதவி வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகங்களில் அளிக்கலாம்.

நவ. 4, 5 மற்றும் 18, 19 ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளன. வாக்குச்சாவடி அமைவிடங்களில் நடைபெறவுள்ள சிறப்பு முகாம்களின் போதும், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பு, நீக்கம், திருத்தம், இடமாற்றம், ஆதார் எண்ணை இணைத்தல் ஆகியவற்றுக்கான படிவங்களை அளிக்கலாம்.

வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் துறையின் இணையதளத்தில் (www.elections.tn.gov.in) பார்வையிடலாம். வாக்காளர் பட்டியலின் இரண்டு நகல்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினருக்கும் வழங்கப்பட்டுள்ளன.

**உடனே நீக்கக் கூடாது:** ஒரு வாக்காளரின் பெயர் ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் இருந்தாலோ, நீண்ட நாள்களாக வீடு பூட்டியிருந்தாலோ சம்பந்தப்பட்ட வீட்டின் முகவரிக்கு வாக்குச்சாவடி அலுவலர் சார்பில் கடிதம் அனுப்பப்படும். அந்தக் கடிதத்துக்கு வாக்காளர் உரிய முறையில் பதில் தரவேண்டும்.

அந்தப் பதிலின் அடிப்படையில், வாக்காளர் குறிப்பிடும் ஓரிடத்தில் மட்டுமே அவரது பெயர் இடம்பெறும். உரிய பதிலை அளிக்காவிட்டால், வாக்குச்சாவடி அலுவலரின் பரிந்துரையை பெற்று பெயர் நீக்கம் செய்யப்படும்.

புதிதாக வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெறும் வாக்காளர்களுக்கு, பதிவுத் தபாலில் வாக்காளர் அடையாள அட்டைகள் மூன்று மாதங்களுக்குள் அனுப்பிவைக்கப்படும் என்றார் தலைமைத் தேர்தல் அதிகாரி.

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# மாவட்ட வாரியாக வாக்காளர்கள் எத்தனை பேர்?

## தேர்தல் துறை தகவல்

**சென்னை, அக். 27:** வரைவு வாக்காளர் பட்டியலில், மாவட்ட வாரியாக உள்ள வாக்காளர்களின் விவரங்களை தமிழக தேர்தல் துறை வெளியிட்டுள்ளது. அதன் விவரம்:

திருவள்ளூர் தொடங்கி மயிலாடுதுறை வரையிலான 38 மாவட்டங்களுக்குமான வரைவு வாக்காளர் பட்டியல் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது. அதில், சென்னை மாவட்டத்தில் மட்டும் 38,68,178 வாக்காளர்கள் உள்ளனர்.

**மொத்த வாக்காளர்கள் – 6.11 கோடி**

**மாவட்ட வாரியாக வாக்காளர்கள் விவரம்:**

1. சென்னை – 38,68,178
2. திருவள்ளூர் – 33,34,786
3. காஞ்சிபுரம் – 13,24,581
4. வேலூர் – 12,57,316
5. கிருஷ்ணகிரி – 15,85,655
6. தருமபுரி – 12,27,302
7. திருவண்ணாமலை – 20,53,618
8. விழுப்புரம் – 16,49,832
9. சேலம் – 28,92,609
10. நாமக்கல் – 14,19,643
11. ஈரோடு – 19,46,886
12. நீலகிரி – 5,70,632
13. கோவை – 30,49,004
14. திண்டுக்கல் – 18,40,831
15. கரூர் – 8,72,423
16. திருச்சி – 22,63,169
17. பெரம்பலூர் – 5,62,499
18. கடலூர் – 20,91,294
19. நாகப்பட்டினம் – 5,41,422
20. திருவாரூர் – 10,36,272
21. தஞ்சாவூர் – 20,01,040
22. புதுக்கோட்டை – 13,15,798
23. சிவகங்கை – 11,66,660
24. மதுரை – 26,37,601
25. தேனி – 11,01,608
26. விருதுநகர் – 15,30,536
27. ராமநாதபுரம் – 11,52,302
28. தூத்துக்குடி – 14,24,748
29. திருநெல்வேலி–13,68,718
30. கன்னியாகுமரி–15,22,036
31. அரியலூர் – 5,07,425
32. திருப்பூர் – 23,16,111
33. கள்ளக்குறிச்சி – 10,90,021
34. தென்காசி – 13,03,062
35. செங்கல்பட்டு – 26,12,536
36. திருப்பத்தூர் – 9,32,806
37. ராணிப்பேட்டை – 10,22,354
38. மயிலாடுதுறை – 7,37,883.

## வயது வாரியாக...

தமிழகத்தில் 40 முதல் 49 வயதுக்கு உட்பட்ட வாக்காளர்களே அதிகம் இருப்பதாக வரைவு வாக்காளர் பட்டியல் மூலம் விவரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதற்கடுத்த நிலையில், 30 முதல் 39 வயதுக்கு உட்பட்ட வாக்காளர்கள் உள்ளனர்.

**வயது – மொத்த வாக்காளர்கள்**

- 18–19 – மூன்று லட்சத்து 94 ஆயிரத்து 909.
- 20–29 – ஒரு கோடியே 5 லட்சத்து 16 ஆயிரத்து 23.
- 30–39 – ஒரு கோடியே 28 லட்சத்து 2 ஆயிரத்து 919.
- 40–49 – ஒரு கோடியே 37 லட்சத்து 63 ஆயிரத்து 488.
- 50–59 – ஒரு கோடியே 10 லட்சத்து 45 ஆயிரத்து 171.
- 60–69 – 71 லட்சத்து 86 ஆயிரத்து 124.
- 70–79 – 39 லட்சத்து 12 ஆயிரத்து 152.
- 80–89 – 12 லட்சத்து 81 ஆயிரத்து 670.
- 90–99 – 2 லட்சத்து 12 ஆயிரத்து 435.
- 100–109 – 15,788.
- 110–119 – 381.
- 120 – வயதுக்கு மேல் – 137.

## படிவங்களும், ஆதாரச் சான்றுகளும்...

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பு, நீக்கம் போன்ற பணிகளுக்காக படிவங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. இந்தப் படிவங்களைத் தேர்தல் துறையின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அதன் விவரம்:

**படிவம் 6:** புதிய வாக்காளர்களை சேர்ப்பதற்கான படிவம்.

**படிவம் 6ஏ:** வெளிநாடுவாழ் வாக்காளர் ஒருவர் பெயரை பட்டியலில் சேர்ப்பதற்குப் பயன்படுத்தலாம்.

**படிவம் 6பி:** வாக்காளர் பட்டியல் அங்கீகாரத்துக்காக ஆதார் எண் உண்மையென சான்று அளிப்பது.

**படிவம் 7:** வாக்காளர் பட்டியலில் ஏற்கெனவே உள்ள பெயரை நீக்கக் கோருவதற்கு.

**படிவம் 8:** வீட்டை ஒரு தொகுதியிலிருந்து வேறு தொகுதிக்கு மாற்றினாலோ அல்லது இப்போது வசிக்கும் தொகுதிக்குள்ளேயே மாற்றினாலோ இந்தப் படிவத்தைப் பயன்படுத்த வேண்டும். வாக்காளர் பட்டியலிலுள்ள பதிவுகளைத் திருத்தம் செய்யவும், மாற்று வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை பெறவும் படிவத்தை உபயோகிக்கலாம்.

## என்னென்ன சான்றுகள் தேவை?

பெயர் சேர்த்தலுக்கான விண்ணப்பத்துடன் வசிப்பிட முகவரி, வயது ஆகியவற்றுக்கான சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும். முகவரிச் சான்றாக முக்கிய ஆவணங்களில் ஏதேனும் ஒன்றின் நகலை அளிக்கலாம். அதன்படி, முகவரிக்காக குடிநீர், மின்சாரம், எரிவாயு இணைப்பு ரசீதில் ஏதேனும் ஒன்று (குறைந்தது ஓராண்டுக்காவது), ஆதார் அட்டை, தேசியமயமாக்கப்பட்ட வங்கி, அஞ்சல் அலுவலகத்தின் இப்போதைய கணக்குப் புத்தகம், கடவுச்சீட்டு, வருவாய்த் துறைகளின் நில உரிமைப் பதிவுகள், பதிவு செய்யப்பட்ட வாடகை குத்தகை பத்திரம், பதிவு செய்யப்பட்ட விற்பனைப் பத்திரம்.

வயதுச் சான்றாக பிறப்புச் சான்றிதழ், ஆதார் அட்டை, பான் அட்டை, ஓட்டுநர் உரிமம், பத்தாம் வகுப்பு அல்லது பிளஸ் 2 வகுப்புச் சான்றிதழ், இந்திய கடவுச்சீட்டு ஆகியவற்றை அளிக்கலாம். 25 வயதுக்குக் கீழுள்ள மனுதாரர்கள் வயதுச் சான்றிதழை அளிக்க வேண்டியது கட்டாயம் என்று தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்தார்.

# தொய்வடையும் தொழிற்கல்வி

**பெ. சுப்ரமணியன்**

தமிழகத்தில் கடந்த 1978-ஆம் ஆண்டு பத்தாம் வகுப்பு + மேல்நிலைக்கல்வி + பட்டப்படிப்பு (பத்து + இரண்டு + மூன்று) என்ற புதிய கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இக்கல்விமுறை இதற்குமுன் 11 + 1 +3 என்றிருந்தது. புதிய கல்விமுறை அறிமுகமானபோது மேல்நிலைக்கல்வியில் பொதுக்கல்வி, தொழிற்கல்வி எனும் இரு வகையான கல்விமுறை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

பொதுக்கல்வியை மட்டுமல்லாது தொழிற்கல்வியையும் மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கில் 1977-ல் சபாநாயகம் குழு, 1985-இல் கோபாலன் குழு, 1993-இல் லாரன்ஸ் தலைமையிலான உயர்நிலைக் குழு என பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழுக்கள் தொழிற்கல்வியின் முக்கியத்துவம் குறித்து பரிந்துரைகள் செய்தன.

1978-இல் சென்னைப் பல்கலைக்கழக துணைவேந்தரும், யுனெஸ்கோ அமைப்பின் துணை இயக்குநருமான மால்கம் ஆதிசேஷய்யா தலைமையிலான குழுவின் 'படித்துக் கொண்டே தொழில் பழகு' என்ற கருத்தின்படி 65 உட்பிரிவுகளுடன் வேளாண்மை, சுகாதாரம், பொறியியல் தொழில்நுட்பம், வணிகவியல், வாணிபம், வீட்டுஅறிவியல், இதர பிரிவுகள் என ஆறு பாடப்பிரிவுகள் கொண்ட தொழிற்கல்வி தொடங்கப்பட்டது.

ஒவ்வொரு பாடப்பிரிவும் அந்தந்த பகுதிக்கேற்ப அரசுப் பள்ளி, அரசு உதவிபெறும் பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது. உதாரணமாக, வீட்டு அறிவியலின் உட்பிரிவான ஆடை வடிவமைப்பு, உணவுப் பாதுகாப்பு, சுகாதார பாடப்பிரிவின் உட்பிரிவான செவிலியர் பயிற்சி, பிசியோதெரபி, இதர பிரிவுகளில் இடம்பெறும் இசை, போட்டோகிராபி, விளையாட்டுக் கல்வி ஆகியவை சென்னை போன்ற பெருநகரங்களில் உள்ள பள்ளிகளில் உள்ளன.

இது 1978-79-இல் தமிழகத்தில் 912 பள்ளிகளில் 709 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது. 1986-இல் தேசிய கல்விக் கொள்கை, தொழிற்கல்வியின்படி மேல்நிலை வகுப்புகளில் 1990-இல் 10 %, 1995-இல் 25 % மாணவர்கள் தொழிற்கல்வி பெறும் வாய்ப்பை வழங்க வேண்டுமெனப் பரிந்துரைத்தது.

தொழிற்கல்வி நடைமுறைக்கு வந்த கல்வியாண்டில் மேல்நிலைக்கல்வி மாணவர்களில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் தொழிற்கல்வி பாடப்பிரிவில் சேர்க்கை பெற்றிருந்தனர். இது இக்கல்வியாண்டில் மேல்நிலைக்கல்வி பயின்ற மாணவர்களின் எண்ணிக்கையில் 21.49 % ஆகும்.

அப்போது மேல்நிலைப்பள்ளிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்ததால் தொழிற்கல்வி பாடப்பிரிவுகளும் குறைவான பள்ளிகளிலேயே செயல்பட்டுவந்தன. அதனால் மாணவர் சேர்க்கை திருப்தியளிக்கும் வகையில் இருந்தது.

பின்னர் மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகள், தனியார் பள்ளிகளில் பொதுக்கல்வி பாடப்பிரிவுகளே தொடங்கப்பட்டன. தொழிற்கல்வி பாடப்பிரிவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை.

மேல்நிலைக்கல்வியில் தொழிற்கல்வி பயின்ற மாணவர்களுக்கு கல்லூரிகளின் சேர்க்கையில் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என 1988-இல் கோரிக்கை எழுந்தது. அதையடுத்து பொறியியல், வேளாண்மை பாடப்பிரிவுகள் ஒவ்வொன்றிலும் 4 %-உம், கலை அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை வணிகவியல் பாடப்பிரிவில் 25 %-உம் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது. இந்த இட ஒதுக்கீட்டு முறை இன்றும் பின்பற்றப்பட்டு வருகிறது.

தொழிற்கல்வி பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டபோது நான்காயிரத்திற்கும் மேற்பட்ட பகுதி நேர ஆசிரியர்கள், முழுநேர ஆசிரியர்கள், ஒரு பகுதிநேரம், இருபகுதி நேர ஆசிரியர்கள் என நான்கு நிலைகளில் நியமிக்கப்பட்டனர். மாவட்ட வாரியாக தொழிற்கல்வி ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு பயிற்சியும் அளிக்கப்பட்டது.

காலப்போக்கில் பணிநிரந்தரம் கோரி தொழிற்கல்வி ஆசிரியர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தினர். அப்போதெல்லாம் அவர்களுக்கு ஊதியம் மட்டும் உயர்த்தப்பட்டது. பின்னர் தொடர் போராட்டத்தின் காரணமாக 1988-இல் தற்காலிக ஆசிரியர்கள் பணிநிரந்தரம் செய்யப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டது.

1992-இல் 587 பேரும், 1994-இல் 1990 பேரும், 2007-இல் 211 பேரும் பணி நிரந்தரம் செய்யப்பட்டனர். அதன் பிறகு இது வரை தொழிற்கல்வி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவில்லை. ஒரு பாடப்பிரிவின் ஆசிரியர் பணி ஓய்வு பெறும்போது அவர் சார்ந்த பாடப்பிரிவு முடக்கப்பட்டு அதற்கான சேர்க்கை ஓராண்டுக்கு முன்னதாகவே நடைபெறுவதில்லை. தமிழகத்தில் உள்ள பெரும்பாலான அரசு மேல்நிலைப்பள்ளிகளில் இந்நிலையே உள்ளது.

தொழிற்கல்வி பாடப்பிரிவுகள் தொடங்கவும், திறம்பட நடத்தவும் மத்திய அரசின் தேசிய கல்வி ஆராய்ச்சி பயிற்சிக் குழு (என்சிஆர்டி) நிதியுதவி வழங்கி வருகிறது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் தொழிற்கல்வி பாடப்பிரிவுகள் சிறப்பாக செயல்படுகின்றன. சில மாநிலங்கள் தொழிற்கல்விக்காக நிர்வாகம், அமைப்பு ரீதியாக மாற்றங்களை மேற்கொண்டுள்ளது.

ஒவ்வொரு மாநிலத்திலும் தொழிற்கல்வி பயில்வோர் தேர்வுசெய்யப்பட்டு அவர்கள் பயின்ற படிப்புக்கேற்ப பயிற்சியும் அளிக்கப்படுகிறது. தமிழகத்தில் தொழிற்கல்வி பயின்றவர்கள் பாடவாரியாக தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு சென்னை தரமணியில் உள்ள பயிற்சி மையத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி பெற்றவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பின்போது முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

தொழிற்கல்வியில் வேளான்மை தொடர்பான பாடப்பிரிவுகளில் பயின்றவர்கள் வேளாண்மை துறையில் உதவி வேளாண் அலுவலர், தோட்டக்கலை அலுவலர் பணிகளில் உள்ளனர். அதுபோன்று இயந்திரவியல் பாடப்பிரிவில் பயின்றவர்கள் சுயதொழில் செய்யும் திறன் பெற்றவர்களாகின்றனர்.

ஆசிரியர்கள் நியமனம் இல்லாமல் பாடப்பிரிவுகளை நீக்குவது தொடர்ந்தால் அரசுப் பள்ளிகளில் தொழிற்கல்வியே இல்லாதநிலை உருவாகும். அதனால் மேல்நிலைக்கல்வியில் அதிகமானோர் சேர்க்கை பெறும்பகுதிகளைக் கண்டறிந்து அப்பகுதியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளிகளில் அந்தந்த பகுதிகளுக்கேற்ப தொழிற்கல்வி பாடப்பிரிவுகளைத் தொடங்கவேண்டும்.

Activate Windows

# வெற்றியுடன் தொடங்கியது இந்தியா



தாய்லாந்து வீராங்கனையிடம் இருந்து பந்தை கடத்திச் செல்ல முனையும் இந்திய வீராங்கனை.

**ராஞ்சி, அக். 27:** மகளிருக்கான ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா முதல் ஆட்டத்தில் 7-1 கோல் கணக்கில் தாய்லாந்தை வெள்ளிக்கிழமை வீழ்த்தியது.

இந்த ஆட்டத்தில் இந்தியாவுக்காக மோனிகா (7'), சலிமா டெடெ (15'), சங்கீதா குமாரி (29', 45', 45'), தீபிகா (40'), லால்ரெம்சியாமி (52') ஆகியோர் ஸ்கோர் செய்தனர். தாய்லாந்துக்காக சுபான்சா சமான்சோ (22') கோலடித்தார்.

இதனிடையே வெள்ளிக்கிழமை நடைபெற்ற இதர ஆட்டங்களில் நடப்பு சாம்பியன் ஜப்பான் 3-0 கோல் கணக்கில் மலேசியாவையும், தென் கொரியா 1-0 கோல் கணக்கில் சீனாவையும் சாய்த்தன. ஜப்பான் தரப்பில் ரிகா ஒகாவா (13'), மாய் டோரியாமா (43'), ஷிஹோ கோபயாகவா (54') ஆகியோரும, தென் கொரியாவுக்காக சுஜின் அன்னும் (18') கோலடித்தனர்.

போட்டியின் 2-ஆம் நாளான சனிக்கிழமை ஆட்டங்களில், இந்தியா - மலேசியா, சீனா - தாய்லாந்து, ஜப்பான் - தென் கொரியா அணிகள் மோதுகின்றன.

# சாதனை படைத்தார் ஷீத்தல் தேவி

**ஹாங்ஸெள, அக். 27:** சீனாவில் நடைபெறும் ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில், இந்திய வில்வித்தை வீராங்கனை ஷீத்தல் தேவி தனிநபர் பிரிவில் வெள்ளிக்கிழமை தங்கப் பதக்கம் வென்றார்.

இரு கைகளும் இல்லாத ஷீத்தல், ஏற்கெனவே கலப்பு அணிகள் பிரிவில் கடந்த வியாழக்கிழமை தங்கம் வென்றிருந்ததால், தற்போது போட்டியின் வரலாற்றில் ஒரே எடிஷனில் இரு தங்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையை படைத்தார். முன்னதாக, அத்தகைய முதல் இந்திய வீரர் என்ற பெருமையை ஓட்டப் பந்தய வீரரான அங்குர் தாமா இதே எடிஷனில் பெற்ற நிலையில், தற்போது அந்த சாதனையில் ஷீத்தலும் இணைந்திருக்கிறார்.




போட்டியின் 5-ஆவது நாளான வெள்ளிக்கிழமை, இந்தியாவுக்கு 17 பதக்கங்கள் கிடைத்தன. வில்வித்தையின் காம்பவுண்ட் மகளிர் தனிநபர் பிரிவில் 144-142 என்ற புள்ளிகள் கணக்கில் சிங்கப்பூரின் அலிம் நூர் சியாஹிதாவை சாய்த்து தங்கம் வென்றார்.

அதிலேயே ஆடவர் தனிநபர் பிரிவில் ராகேஷ் குமார் வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

பாட்மின்டனில், நடப்பு பாராலிம்பிக் சாம்பியனான பிரமோத் பகத் ஆடவர் ஒற்றையர் (எஸ்எல்3) பிரிவில் தங்கம் வென்று அசத்தினார். அதிலேயே எஸ்எல்4 பிரிவில் சுஹாஸ் யதிராஜும் தங்கப் பதக்கத்தை கைப்பற்றினார். மகளிர் தனிநபரில் (எஸ்யு5) துளசிமதியும், ஆடவர் இரட்டையரில் (எஸ்எல்3-எஸ்எல்எஃப்4) நிதேஷ், தருண் கூட்டணியும் தங்கம் வெல்ல, மகளிர் இரட்டையரில் (எஸ்எல்3-எஸ்யு5) துளசிமதி, மானசி ஜோஷி வெள்ளி பெற்றது.

ஆடவர் தனிநபரில் (எஸ்ஹெச்6) கிருஷ்ணா நாகரும், ஆடவர் இரட்டையரில் (எஸ்யு5) சிராக் பரேதா, ராஜ்குமார் கூட்டணியும் வெள்ளிப் பதக்கம் வென்றனர். ஆடவர் 1,500 மீ (டி38) பிரிவில் ரமன் சர்மா, நீளம் தாண்டுதலில் (டி64) தர்மராஜ் சோலைராஜ் தங்கம் வென்று அசத்தினர்.

ஆடவர் ஈட்டி எறிதலில் (எஃப்54) பிரதீப் குமார், லக்ஷித் ஆகியோர் முறையே வெள்ளி மற்றும் வெண்கலம் பெற்றனர். மகளிர் வட்டு எறிதலில் லக்ஷ்மி (எஃப்37/38), ஆடவர் குண்டு எறிதலில் (எஃப்37) மானு ஆகியோர் வெண்கலம் வென்றனர். நீச்சலில் ஆடவர் 50 மீ பட்டர்ஃப்ளை (எஸ்7) பிரிவில் சுயாஷ் நாராயண் வெண்கலம் பெற்றார்.

**பதக்கப் பட்டியல் – டாப் 10**

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 196 | 159 | 139 | 493 |
| ஜப்பான் | 39 | 44 | 56 | 139 |
| ஈரான் | 39 | 39 | 37 | 115 |
| தென் கொரியா | 28 | 30 | 37 | 95 |
| இந்தோனேசியா | 26 | 21 | 32 | 79 |
| இந்தியா | 25 | 29 | 45 | 99 |
| தாய்லாந்து | 25 | 22 | 49 | 96 |
| உஸ்பெகிஸ்தான் | 24 | 23 | 25 | 72 |
| கஜகஸ்தான் | 8 | 12 | 21 | 41 |
| ஹாங்காங் | 7 | 15 | 22 | 44 |

# 7 பதக்கங்களுடன் தமிழ்நாடு 7–ஆம் இடம்

**பணாஜி, அக். 27:** கோவாவில் நடைபெறும் 37-ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளில், 2-ஆம் நாளான வெள்ளிக்கிழமை தமிழ்நாடு 2 தங்கம், 3 வெள்ளி, 2 வெண்கலம் என 7 பதக்கங்களுடன் 7-ஆம் இடத்தில் இருக்கிறது.

பளுதூக்குதல், வாள்வீச்சில் தலா 1 தங்கமும், பாட்மின்டன், வாள்வீச்சு, பென்காக் சிலாட் ஆகியவற்றில் தலா 1 வெள்ளியும், பாட்மின்டன், வாள்வீச்சில் தலா 1 வெண்கலமும் தமிழ்நாடுக்கு கிடைத்துள்ளன. பதக்கப்பட்டியலில் மகாராஷ்டிரம் 11 தங்கம், 12 வெள்ளி, 13 வெண்கலம் என 36 பதக்கங்களுடன் முதலிடத்தில் இருக்கிறது. ஹரியாணா 19 பதக்கங்களுடன் (10/3/6) அடுத்த இடத்திலும், சர்வீசஸ் அணி 13 பதக்கங்களுடன் (6/5/2) மூன்றாவது இடத்திலும் உள்ளன.




மகளிர் கூடைப்பந்தாட்டத்தில் வெள்ளிக்கிழமை மோதிய தமிழ்நாடு – கேரள அணியினர்.

# அர்ஜுன், திலோத்தமா பாரீஸ் ஒலிம்பிக்குக்கு தகுதி

**புது தில்லி, அக். 27:** தென் கொரியாவில் நடைபெறும் ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் அர்ஜுன் பபுதா, திலோத்தமா சென் ஆகியோர் வெள்ளிப் பதக்கம் வென்று, பாரீஸ் ஒலிம்பிக்கிற்கும் தகுதிபெற்றனர்.


அர்ஜுன்


திலோத்தமா

10 மீட்டர் ஏர் ரைஃபிள் ஆடவர் தனிநபர் பிரிவில் அர்ஜுன் 251.2 புள்ளிகளுடன் 2-ஆம் இடம் பிடிக்க, மற்றொரு இந்தியரான திவ்யன்ஷ் சிங் பன்வார் 4-ஆம் இடம் (209.6) பிடித்தார். அதிலேயே அணிகள் பிரிவில் அர்ஜுன், திவ்யன்ஷ், ஹிருதய் ஹஸாரிகா கூட்டணி 1,892.4 புள்ளிகளுடன் தங்கம் வென்றது.

அதில் மகளிர் தனிநபர் பிரிவில் திலோத்தமா சென் 252.3 புள்ளிகளுடன் வெள்ளியும், ரமிதா ஜிண்டால் 230.6 புள்ளிகளுடன் வெண்கலமும் பெற்றனர். இப்பிரிவின் அணிகள் களத்தில் திலோத்தமா, ரமிதா, ஷ்ரியங்கா சதங்கி அடங்கிய அணி வெண்கலப் பதக்கம் பெற்றது.

சீனியர் ஸ்கீட் கலப்பு அணிகள் பிரிவில் அனந்த்ஜீத் சிங், தர்ஷனா ராத்தோர் கூட்டணி 40-37 என குவைத் கூட்டணியை வென்று தங்கம் தட்டிச் சென்றது. அங்கத் பாஜ்வா, பரினாஸ் தலிவால் இணை 9-ஆம் இடம் பிடித்தது. ஜூனியர் பிரிவில் ஹர்மெஹர் லாலி, ராய்ஸா தில்லன் இணை 39-29 என சீனா ஜோடியை வீழ்த்தி தங்கம் வென்றது. ரிதுராஜ் பந்தேலா, சஞ்ஜனா சூத் ஜோடி 4-ஆம் இடம் பிடித்தது.

தற்போதைய நிலையில் இந்தியா 8 தங்கம், 7 வெள்ளி, 4 வெண்கலம் என 19 பதக்கங்கள் பெற்றுள்ளது.

EVA STALIN IAS ACADEMY